10/=
# எதிரொலி
Registered as a Newspaper in Srilanka
Ethiroli
பக்கங்கள் 08
குரல் 02 அதிர்வு 25 வெள்ளிக்கிழமை 25 மே 2018 ethirolimedia@gmail.com 021 224 38 18




## குறூப் 16
### மகிந்தவுடன் சங்கமம்

கொழும்பு,மே 25

மகிந்த ராஜபக்ஷவின் தலைமைத்துவத்தை ஏற்றுச் செயற்படுவதற்கு குறூப் 16 இணங்கியுள்ளது.

கூட்டு அரசாங்கத்தில் இருந்து விலகி, எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்து கொண்ட சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் 16 நாடாளுமன்ற உறுப்பினர்களும், நேற்றுமுன்தினம் மாலை கொழும்பில் மகிந்த ராஜபக்ஷவைச் சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

இந்தச் சந்திப்புத் தொடர்பாக கருத்து வெளியிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சந்திம வீரக்கொடி, மகிந்த ராஜபக்ஷவின் தலைமைத்துவத்தைஏற்றுக்கொள்ள தாம் இணங்கியுள்ளதாக 06▶

## மகிந்த–மங்கள சந்திப்பு இடம்பெறவே இல்லை


கொழும்பு,மே 25

கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது அமைச்சர் மங்கள சமரவீரவை முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சந்தித்ததாக வெளியான செய்திகளில் எந்த உண்மையுமில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகே குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஒன்றிணைந்த எதிர்க்கட்சியின் ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தபோதே இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

"அண்மையில் ஊடக சந்திப் 06▶

# இலங்கைப் போர் முக்கிய ஆவணங்களை அழித்தது பிரிட்டன்





கொழும்பு,மே 25

இலங்கை போருடன் தொடர்புடைய சுமார் 200 ஆவணங்களை பிரித்தானிய வெளியுறவு அலுவலகம் அழித்துள்ளதாக த காடியன் ஊடகம் தகவல் வெளியிட்டுள்ளது.

விடுதலைப் புலிகளின் காலத்தின் போதும் போரின் போதும் இலங்கை படையினருக்கு வழங்கிய இரகசிய எம்15 மற்றும் எஸ்ஏஎஸ் என்ற ஆலோசனைகள் தொடர்பான ஆவணங்களே அழிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. 06▶



## நினைவு கூருவதற்கு அனுமதித்தது தவறு கோத்தா ஆவேசம்

கொழும்பு,மே 25

போரில் உயிர்நீத்த உறவுகளை வடக்கு மக்கள் நினைவு கூரவில்லை என்று தெரிவித்த முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ மாறாக அவர்கள் தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர்களையே அஞ்சலித்ததாகவும் தெரிவித்துள்ளார்.

இதற்கு எந்தவித இடையூறுகளையும் விளைவிக்காத அரசாங்கம் தொடர்பாக கடும் கண்டனத்தை வெளியிட்ட கோத்தபாய விடுதலைப் புலிகளின் போராளிகளை நினைவு கூர்வதற்கு அனுமதியளித்திருக்கவே கூடாது என்றும் கூறியுள்ளார்.

எதிர்வரும் 2020ஆம் 06▶

## ஞானசாரர் குற்றவாளியே



கொழும்பு,மே 25

காணாமல் போன ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொடவின் மனைவி சந்தியா எக்னெலிகொடவுக்கு ஹோமாகம நீதிமன்றத்தில் வைத்து மிரட்டியதாகக் கூறும் சம்பவம் தொடர்பில் பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் குற்றவாளியென தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

குறித்த வழக்கு நேற்று ஹோமாகம நீதவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே நீதவான் உதேஷ் ரணதுங்க இந்த தீர்ப்பினை வழங்கியுள்ளார்.

இதற்கமைய நேற்றையதினம் தேரரின் கைவிரல் அடையாளம் 06▶

## யாழில் சட்டவிரோத கேபிள் ரீவி இணைப்புகள் மீது நடவடிக்கை

யாழ்ப்பாணம்,மே 25

யாழ்ப்பாணம் நீதிமன்ற நியாயாதிக்க எல்லைக்குள் சட்டவிரோதமாக வழங்கப்படும் கேபிள் ரீவி இணைப்புகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்க தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவுக்கு நீதிவான் சின்னத்துரை சதீஸ்தரன் அனுமதியளித்து கட்டளை வழங்கினார்.

யாழ்ப்பாணத்தில் தொலைத்தொடர்பு 06▶

## கொக்குத்தொடுவாயில் தரமுயர்ந்த பாடசாலை

முல்லைத்தீவு,மே 25

முல்லைத்தீவு மாவட்டத்தின் எல்லைக்கிராமமான கொக்குத்தொடுவாய் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை தரமுயர்த்தப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு இடம்பெற்ற சாதாரண தர பரீட்சையில் 95 விழுக்காடு சித்தியடைந்த இந்த பாடசாலை மாணவர்கள் தமது 06▶



## வவுனியாவில் கஞ்சாவுடன் யாழ்ப்பாண பெண் கைது

வவுனியா,மே 25

வவுனியாவில் நேற்று காலை புதிய பஸ் நிலையத்தில் 4கிலோ கேரளா கஞ்சாவுடன் பெண் ஒருவரைக் கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வவுனியா புதிய பஸ் நிலையத்தில் நேற்று காலை 7.30 மணியளவில் யாழ்ப்பாணத்திலிருந்து திருகோணமலை சென்ற பஸ்ஸில் கேரள கஞ்சா கொண்டு செல்லப்படுவதாக போதை ஒழிப்புப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் 06▶

## யாழில் மாணவர்களுக்கு மாவா விற்றவர்கள் கைது

யாழ்ப்பாணம்,மே 25

யாழ்ப்பாணம் பெருமாள் கோவில் பகுதியில் நேற்றுமுன்தினம் மாலை, பாடசாலை மாணவர்களுக்கு மாவா போதைப்பொருள் விற்பனை செய்த இரு இளைஞர்கள், பொலிஸாரால், கைது செய்யப்பட்டனர்.

பெருமாள் கோவில் பகுதியில் விற்பனைக்காக வைத்திருந்த நபர்களிடமிருந்து 500 கிராம் மாவா என்று அழைக்கப்படும், போதைப் பொருள் கைப் 06▶

### ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட
## மகிந்தவிடம் ஆசீர்வாதம் பெறவேண்டும் மைத்திரி

கொழும்பு,மே 25

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மீண்டும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட வேண்டும் என்றால் மஹிந்த ராஜபக்ஷவிடம் ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் 06▶



## ஈ.பி.எப். ஈ.ரி.எப். கணக்கு இலக்கங்கள் அடையாள அட்டை இலக்கத்துக்கு

கொழும்பு,மே 25

ஈ.பி.எப். மற்றும் ஈ.ரி.எப். நிதியங்களில் உள்ள ஊழியர்களின் கணக்கு இலக்கங்களை அவர்களது அடையாள அட்டை இலக்கங்களுக்கு ஏற்ப மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தொழிலாளர்கள் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சர் ரவீந்திர சமரவீர தெரிவித்துள்ளார்.

இந்த புதிய முறைமையினால் ஊழியர்கள் தங்களது நிறுவனங்களை மாற்றிக் கொள்ளும் 06▶

## கோப்பாய் விபத்தில் முதியவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம்,மே 25

கோப்பாய் சந்தியில் நேற்றுக் காலை கன்டர் வாகனம் மோட்டார் சைக்கிளுடன் மோதி விபத்துக்குள்ளானதில் முதியவர் ஒருவர் உயிரிழந்தார். இந்த விபத்தில் , கோண்டாவில் நவரட்ணராஜா வீதியைச் சேர்ந்த சின்னத்துரை ராசரட்ணம்(வயது 62) என்பவரே உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப் படுகிறது. 06▶

# அனர்த்தத்தால் புத்தளத்தில் 24,133 பேர் பாதிப்பு !

புத்தளம், மே 25

சீரற்ற காலநிலை காரணமாகப் புத்தளம் மாவட்டத்தில் 6 ஆயிரத்து 255 குடும்பங்களைச் சேர்ந்த, 24 ஆயிரத்து 133 பேர் பாதிக்கப் பட்டுள்ளனர் என்று புத்தளம் அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

பாதிக்கப்பட்டுள்ள மக்களை தங்கவைப் பதற்காக 81 தற்காலிக முகாம்கள் அமைக்கப் பட்டுள்ளன. மஹவெவ பகுதியில் 15 முகாம் களும், தங்கொட்டுவ பகுதியில் ஒரு முகாமும், ஆராச்சிக்கட்டுவப் பகுதியில் 9 முகாம்களும், நாத்தாண்டியப் பகுதியில் 39 முகாம்களும், சிலாபத்தில் 11 முகாம்களும், வென்னப்புவ பகுதியில் 5 முகாம்களும், கற்பிட்டி பிரதேசத் தில் ஒரு முகாமும் அமைக்கப்பட்டுள்ளது.

சீரற்ற காலநிலையால் புத்தளம் மாவட்டத்தில் மாத்திரம் இதுவரை மூவர் உயிரிழந்துள்ளனர். எச்சரிக்கைகளை மீறி செயற்பட்ட காரணத்தி னாலேயே இவர்கள் உயிரிழந்தனர் என்று அனர்த்த முகாமைத்துவ நிலையம் சுட்டிக்காட்டி உள்ளது. (ஆ)

# துப்பாக்கி வெடித்ததில் ஒருவர் பலி!

மட்டக்களப்பு, மே 25

மட்டக்களப்பு கித்துள் காட்டுக்குள் மிருக வேட்டைக் குச் சென்ற குடும்பஸ்தர் ஒரு வரின் துப்பாக்கி தவறுதலாக வெடித்ததில், அவர் உயிரிழந்த சம்பவம் அந்தப்பகுதியில் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

இந்தச் சம்பவம் நேற்றுமுன் தினம் இரவு இடம்பெற்றுள் ளது என்று கரடியனாறு பொலிஸார் தெரிவித்தனர்.

கரடியனாறு கித்துள் பிர தேசத்தைச் சேர்ந்த 40 வயது டைய கருப்பையா இராம கிருஷ்ணன் என்பவரே இவ் வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த நபர் மிருக வேட் டைக்குச் சென்றபோது, துப் பாக்கி தவறுதலாக வெடித்தது. இதனால் அவருடைய தொடைப் பகுதியில் குண்டு பாய்ந்துள் ளது. இதையடுத்து, அவரை செங்கலடி வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக எடுத்துச் சென்ற நிலையில், அவர் உயிரிழந் துள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைக் கரடியனாறு பொலிஸார் மேற்கொண்டுள் ளனர். (ஆ)

# 1500 தமிழ் மொழி மூல ஆசிரியர்கள் இணைப்பு!

கொழும்பு, மே 25

2 வருடங்கள் ஆசிரியர் பயிற்சியை நிறைவு செய்த தமிழ் மொழி மூல ஆசிரியர்கள் ஆயி ரத்து 500 பேர், இந்த மாதம் 30 ஆம் திகதி தொடக்கம் பாடசாலைகளில் கற்பித்தல் பணி யில் இணைத்துக் கொள்ளப்பட உள்ளனர்.

2016, 2017 ஆம் ஆண்டுகளில் ஆசிரியர் பயிற்சிக் கற்கை நெறிகளில் இணைந்து பயிற் சியை பெற்றுக்கொண்ட இவர்கள், இரண்டு வருட பயிற்சியை நிறைவு செய்துகொண்டு எதிர் வரும் 28 ஆம் திகதி திங்கட்கிழமை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளில் இருந்து வெளியே றுகின்றனர். இவர்களில் 322 ஆசிரியர்கள் கோப்பாய் ஆசிரியக் கலாசாலையில் பயிற்சி பெற்றவர்கள் ஆவர்.

மலையகப் பாடசாலைகளின் ஆசிரியர் ஆளணியை கருத்தில்கொண்டு போட்டிப் பரீட்சை மூலம் ஆசிரிய உதவியாளர்களாக நிய மனம் பெற்ற இவர்கள், ஆசிரியர் கலாசாலை களில் பயிற்சி பெறுவதற்கு 2016 ஆம் ஆண்டு அனுமதிக்கப்பட்டனர்.

இலங்கையில் செயற்பட்டுக்கொண்டிருக்கும் நான்கு தமிழ்மொழி ஆசிரியர் கலாசாலைகளில் இவர்கள் பயிற்சிபெற்றனர். இவர்களுக்கு ஆசி ரியர் கலாசாலை பயிற்சிக்கான இறுதிப் பரீட் சையில் சித்தியடைந்த பின்னர், இலங்கை ஆசிரி யர் சேவை வகுப்பு 3 (ஆ) தரத்தில் உள்ளீர்ப்பு செய்யப்பட்டு ஒய்வூதியத்துடன் கூடிய கொடுப் பனவுத் திட்டத்தின்படி சம்பளம் வழங்கப்படும்.

ஆசிரியர் உதவியாளர் நியமனம் பெற்ற இவர்களுக்கு ஊக்குவிப்பு உதவி என்ற வகை யிலேயே மாதாந்தம் கொடுப்பனவு வழங்கப் பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது . (ஆ)



# இராணுவத் தளத்தை அமைக்கவில்லை !

## சீனா மறுப்பு

கொழும்பு, மே 25

அம்பாந்தோட்டையில் துறை முக அபிவிருத்தி மற்றும் கைத் தொழில் வலயம் என்ற பெயரில், சீனா இராணுவத் தளத்தை அமைத்து வருவதாகக் கூறப்படும் குற்றச்சாட் டுகளை சீனத் தூதுவர் செங் ஷியு வான் நிராகரித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடந்த நிகழ்வு ஒன்றின் பின்னர், எழுப் பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

"இலங்கையில் சீனா இராணுவத் தளம் அமைக்கின்றது என்று பெரும ளவான ஊடகங்கள் தெரிவிக்கின்றன. ஆனால், அவற்றில் உண்மையில்லை.

அம்பாந்தோட்டை துறைமுகத் தின் பாதுகாப்புத் தொடர்பான விவ காரங்கள் அனைத்தும், உள்ளூர் அதி காரிகளினாலேயே கையாளப்படும் என்று உடன்பாடு செய்து கொள் ளப்பட்டுள்ளது.

இது ஒரு கூட்டு முயற்சி. இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு 30 வீதப் பங்குகள் உள்ளன. இது ஒன்றும் சீனாவின் தனிப்பட்ட முதலீட்டு வல யம் அல்ல. ஏனைய நாடுகளும் முத லீடு செய்ய முடியும். நான் கூறுவ தைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வும், இராணுவத் தளபதிகளும் உறு திப்படுத்துவார்கள்." என்றும் அவர் கூறியுள்ளார். (ஆ)

# சிறை அதிகாரிகள் ஐவர் இடைநீக்கம்

வெலிக்கடை, மே 25

வெலிக்கடை சிறைச்சாலை வைத் தியசாலையில் இருந்து தப்பியோடிய, போதைப்பொருள் வர்த்தகர் நாட் டைவிட்டுத் தப்பிச்சென்றுள்ளார் என சிறைச்சாலைகள் திணைக்களம் அறிவித்துள்ளது. இதனால், குறித்த கைதி தப்பிச் செல்வதற்கு உதவினர் என்ற குற்றச்சாட்டின் கீழ், சிறைச் சாலை அதிகாரிகள் ஐவர் இடை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

இந்தத்தகவலை சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் நிஷான் தன சிங்ஹ தெரிவித்துள்ளார்.

குறித்த கைதி தப்பிச் செல்வதற்கு சிறைச்சாலைக்குள் இருந்து ஆதரவு கிடைத்துள்ளதா என்பது தொடர் பிலும் விசாரணைகளை முன்னெடுக் கப்பட்டுள்ளன என்றும் அவர் குறிப் பிட்டார்.

தப்பியோடிய கைதி, 'அடோ முப்பயே' எனும் போதைப்பொருளை மறைத்துவைத்திருந்தார் என்ற சந் தேகத்தின் பேரில், சோதனைக்குட் படுத்துவதற்காக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தார்.

அவரிடமிருந்து 11.5 , கிராம் போதைப்பொருள் மீட்கப்பட்டு எனி னும், அவர் கடந்த 5 ஆம் திகதி தப்பி யோடியமை குறிப்பிடத்தக்கது. (ஆ)

# மாகாணசபைத் தேர்தல்: இந்த வாரம் ஆலோசனை

கொழும்பு, மே 25

மாகாணசபைகளுக்குத் தேர்தலை நடத்துவது தொடர் பாக, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, இந்த வாரம் ஆலோசனை நடத்தி முடி வெடுக்க உள்ளார் என்று சபாநாயகர் கரு ஜெயசூரிய தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் வைத்து நேற்றுமுன்தினம் கருத்துத்தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

ஏற்கனவே மூன்று மாகா ணசபைகளின் பதவிக் காலம் முடிவடைந்துள்ள நிலையில், மேலும் மூன்று சபைகளின் பதவிக்காலம் அடுத்த சில மாதங்களில் முடிவடைய உள்ளது. இந்த நிலையில், மாகாணசபைத் தேர்தல்களை ஒத்திவைப் பதற்குத் தொகுதிகளின் எல்லை நிர்ணய அறிக் கையை அரசாங்கம் பயன் படுத்துகிறதா என்று கூட்டு எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப் பெரும சந்தேகம்வெளியிட் டார்.



இதற்குப் பதிலளித்த சபாநாயகர், இந்த விவகா ரத்தில் தாம் சிறப்புக் கவ னம் செலுத்துவதாகவும், இந்த வாரம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இது தொடர்பில் ஒரு முடிவுக்கு வருவார் என்றும் குறிப்பிட் டார்.

இதேவேளை, மாகாண சபைத் தேர்தலைப் பிற் போட ஐக்கிய தேசியக் கட்சி விரும்பவில்லை என்று அமைச்சர் ஏரான் விக்கிரமரத்ன தெரிவித் துள்ளார். (ஆ)



# தென்மராட்சியில் விபத்து: டிப்பர் சாரதி படுகாயம்!

## ரயில் போக்குவரத்தில் தடங்கல்

யாழ்ப்பாணம், மே 25

யாழ்.தென்மராட்சி ஏ 9 வீதி யில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த டிப்பர் வாகனத்தின்மீது, பிறி தொரு டிப்பர் வாகனம் பின்னால் மோதி விபத்துக்குள்ளானதில், சாரதி படுகாயமடைந்துள்ளார். இந்த வாகனங்கள் கவிழ்ந்து ரயில் தண்டவாளத்தில் வீழ்ந்தமையால், ரயில் போக்குவரத்துக்கள் தடைப் பட்டன.

இந்தச் சம்பவம் நேற்று அதி காலை 5 மணியளவில் இடம்பெற் றுள்ளது.

இதில், மன்னாரைச் சேர்ந்த 27 வயதுடைய லோகநாதன் சர்மிலன் என்ற இளைஞரே படுகாய மடைந்துள்ளார்.

கொழும்பில் இருந்து யாழ்ப்பா ணம் நோக்கிப் பயணிக்கும் "நைற் மெயில்" ரயில் அதிகாலை 6.10 மணியளவில் யாழ்.ரயில் நிலை யத்தை வந்தடைய இருந்தபோதி லும், இந்தத் தடங்கல் காரணமாக 7.30 மணியளவிலேயே ரயில் நிலையத்தை வந்தடைந்தது.

இதே வேளை, யாழ்ப்பாணத் தில் இருந்து காலை 6.10 மணிக்கு கொழும்பு நோக்கிப் புறப்படும் "ருத்திராதேவி" ரயில் காலை 7.15 மணியளவிலேயே தாமதமாக தனது பயணத்தை ஆரம்பித்தது. (ஆ-4)

## அமெ. குடியுரிமை இரத்து:

# பசில், கோத்தாவிடம் விளக்கம் கோரல்!

முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்சவும், முன்னாள் பாது காப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்சவும் அமெரிக்கக் குடியுரி மையை இரத்துச் செய்வதற்கு விண்ணப்பித்தார்களா என்பதை வெளிப்படுத்த வேண்டும் என்று, ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் அஷு மாரசிங்க கோரியுள்ளார்.

"அமெரிக்காவில் குடியுரிமையை இரத்துச் செய்யும் முறை மிக வும் சிக்கலானது. அதற்கு ஆறு மாதங்கள் தொடக்கம் இரண்டு ஆண்டுகள் வரைத் தேவைப்படும். பசில் ராஜபக்சவும், கோத் தபாய ராஜபக்சவும் வருங்காலத் தேர்தல்களில் போட்டியிடுவது பற்றிய நம்பிக்கைகளை அளிப்பதற்கு முன்னர், அமெரிக்க குடி யுரிமையை இரத்துச் செய்வதற்கு விண்ணப்பித்தார்களா என் பதை நாட்டுக்கு பகிரங்கப்படுத்த வேண்டும்." என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இரட்டைக் குடியுரிமை கொண்டவர்கள் தேர்தலில் போட்டி யிட முடியாது. இதனால், அமெரிக்க குடியுரிமையை நீக்குமாறு கோத்தபாய ராஜபக்ச அமெரிக்க அதிகாரிகளிடம் விண்ணப் பித்தார் என்றும், அந்தக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டதாகவும் சில செய்திகள் வெளியாகியிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது. (ஆ)



எதிரொலி Ethiroli
வெள்ளி, 25 மே 2018 ethirolimedia@gmail.com

# அரசியலற்ற அஞ்சலி

2009 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஈழத்தமிழர்களுக்காக பெரும் எண்ணிக்கையில் தீயில் வெந்து இறந்த பின்னர், தமிழக மக்கள் மீண்டுமொருமுறை அதிகாரத்துக்கு எதிரான தமது போர்க்குணத்தை காண்பித்திருக்கிறார்கள். ஆளும் வர்க்கத்துக்கு எதிரான தங்களது ஓர்மம் சமரசம் செய்ய முடியாதது என்பதை மீண்டுமொரு தடவை களத்தில் வந்து நின்று நிரூபித்திருக்கிறார்கள்.

சமூகப்பொறுப்புள்ள போராட்டங்கள் எனப்படுபவை இப்போது, போலி இணையத்தளங்களுக்குள் ஒளிந்து கிடந்து குழறும் வாய்ச்சவாடல்களாவும் மலிந்திருக்கும் நிலையில் –

'கார்ப்பரேட்' பூதத்துக்கு எதிரான மாபெரும் மக்கள் சக்தி ஒன்றை ஒன்று திரட்டி வீதியில் இறங்கி அதற்காக தங்கள் உயிரையும் ஆகுதியாகியிருப்பது என்பது மாபெரும் தியாகம். "செயல் வீரம்" என்பது இதுதான் என்று எழுதிவைத்துச் சென்றிருக்கிறார்கள் இதில் உயிர் துறந்த உணர்வாளர்கள்.

அது இன்னொரு வகையிலும் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. அதாவது, போராட்டத்தின்போது தமிழக பொலிஸின் சினைப்பர் படையணியினரால் சுட்டுக் கொல்லப்பட்டவர்களில் ஒன்பது பேர் இந்த மக்கள் போராட்டத்தை முன்னின்று ஒருங்கமைத்தவர்கள். முன்னணியில் இயங்கியவர்கள். மக்களுக்கான பெரும் பாலமாக களத்தில் நின்றவர்கள். ஆக, இந்தப் படுகொலை படலமானது, எழுந்தமானமாகக் கூட்டத்தை நோக்கி மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டினால் இடம்பெற்றது அல்ல. நன்கு திட்டமிட்டு, யார் யாரையெல்லாம் போட்டுத்தள்ளினால், இந்தப்போராட்டத்தை ஆணிவேரோடு பிடுங்கி எறியலாம் என்ற தூரநோக்கத்தோடு மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. தலைகளை போட்டுத்தள்ளிவிட்டால், அவர்களுக்கு பின்னாலுள்ள மக்களை முருங்கை மரத்தில் ஒட்டியிருக்கும் மயிர்கொட்டிகளை போல பாளையை கொழுத்தி பிடித்து பொசுக்கிவிடலாம் என்ற நம்பிக்கையுடன் திட்டமிட்டு நடத்தப்பட்டிருக்கிறது. ஒரு மாநில அரசாங்கத்தினால் இப்படி துணிச்சலாக – கொத்தாக ஒரு கொலைப் படலத்தை – நிறைவேற்றிவிடலாம் என்பதெல்லாம் கொடுமையான கணிப்பு. மத்திய அரசின் நேரடி நெறிப்படுத்தலில் – மோடியின் தயவிலான காப்பரேட்டுக்களின் முழுமையான ஆசீர்வாதத்துடன் மேற்கொள்ளப்பட்டிருக்கும் – திட்டமிட்ட அரச பயங்கரவாதம்தான் இது!

ஆக இனி அடுத்தது என்ன?

தாங்கள் எப்படியான நச்சு முடிவுகளை எடுத்தாலும் அவற்றை இருகரம் நீட்டி வாங்கி வாயில் போட்டுக் கொள்ளவேண்டும் என்ற அதிகார வர்க்கத்தின் எதிர்பார்ப்புகளுக்கு கொடுக்கவேண்டிய எதிர்ப்பு, போராட்டத்தில் உயிர் நீத்த மக்களின் தியாகத்தை நீர்த்துப்போக செய்யாதவண்ணமிருக்கவேண்டுமே தவிர, கொச்சைப் படுத்துவதாக அமைந்துவிடக்கூடாது.

தூத்துக்குடி போராட்டம் இப்படியொரு கொதி நிலையை அடையும். அப்போது தங்களின் பக்கம் அரசியல்வாதிகளை அணைத்து வைத்துக்கொண்டால் அதிகார சக்திகளிடமிருந்து தங்களை பாதுகாத்து கொள்ளலாம் என்று முழுமையாக தெரிந்தும்கூட, தங்களை நாடி வந்த அனைத்து அரசியல் தரப்பினரை அகற்றிவிட்டு சாவை எதிர்நோக்கியவாறு களத்தில் நின்றிருக்கிறார்கள் போராட்டக்காரர்கள். எல்லாத் தருணங்களிலும் போராட்டங்களை தங்களுக்கு ஏற்றவாறு பயன்படுத்திக்கொள்ளும் அரசியல் தரப்பினரை இந்தப்போராட்டத்தின்போது போராட்டக்காரர்ரகள் பயன்படுத்தியிருந்தால் இப்படியொரு இழப்பை தவிர்த்திருக்கலாமோ என்ற கேள்வி, குண்டடிபட்டு வீழ்ந்து கிடக்கும் ஒவ்வொரு உடலங்களையும் பார்க்கும்போது உள்ளுக்குள் அழுத்திக் கொண்டிருக்கிறது.

ஆனால், நடந்தது நடந்துவிட்டது.

'இனி இந்தப்போராட்டத்தினை முன்கொண்டு செல்லவேண்டுமாயின் – அதன் தொடர்ச்சியை கனதி குன்றாமல் பேணவேண்டுமாயின் – நிச்சயம் இதிலொரு அரசியல் கலப்படத்தை மேற்கொள்ள அனுமதிக்க முடியாது. அதுதான் இறந்த போராளிகளுக்கு செய்யும் அஞ்சலியும் தொடர்ச்சியான மக்கள் எழுச்சிக்கான உந்து சக்தியாகவும் அமையும். அரசியல்வாதிகள் ஏதாவது செய்ய விரும்பினால், கார்ப்பரேட்டுக்களுடன் ஒப்பந்தமிடும் அரசின் பேனாவை வாங்கி முறித்தெறிவதற்கான வேறு வழிகளை கண்டுபிடிக்கச்சொல்லுங்கள்.

"உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்"

# ரணிலின் பதவிக்கு தொடரும் நெருக்கடி

கொழும்பு,மே 25

ஐக்கிய தேசிய கட்சியின் தலைமை பொறுப்பிலிருந்து பிரதமர் ரணில் விக்ரமசிங்கவை நீக்கி, புதிய தலைவரை நியமிக்கும் செயற்பாடுகள் தீவிரமடைந்துள்ளன.

ரணிலை தலைமையிலிருந்து நீக்குவதற்கான புதிய முயற்சியாக திஸ்ஸமஹாராமயவிலிருந்து, ஐ.தே.க. தலைமையகம் அமைந்துள்ள சிறிகொத்த வரையான எதிர்ப்பு பேரணியொன்றை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த அறிவிப்பை தென் மாகாண சபை உறுப்பினர் டி.வி.கே.காமினி ஊடகவியலாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் இரு வாரங்களுக்குள் கட்சியின் ஏராளமான ஆதரவாளர்களுடன் எதிர்ப்பு பேரணி இடம்பெறும் என்றும் குறிப்பிட்டார்.

தென்மாகாண உறுப்பினர்கள் மாத்திரமன்றி, ஏனைய மாகாண சபைகளின் பெரும்பாலான ஐ.தே.க. உறுப்பினர்களும் இதில் பங்குபற்றுவார்கள் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

# லண்டன், கிங்ஸ்ரன் நகர மேயராக யாழ்ப்பாண தமிழர் பதவியேற்பு



லண்டன், கிங்ஸ்ரன் நகரத்தின் மேயராக வைத்தீஸ்வரன் தயாளன் நேற்றுமுன்தினம் பதவியேற்றுள்ளார். கடந்த 3ஆம் திகதி நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தலில் ரொல்வத் வட்டாரத்தில் லிபரல் ஜனநாயக கட்சி சார்பில் போட்டியிட்ட இவர் பெருமளவான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்றிருந்தார். இவர் போட்டியிட்ட லிபரல் கட்சி 39 ஆசனங்களையும், எதிர்த்துப் போட்டியிட்ட கொன்சவேட்டிவ் கட்சி 9 ஆசனங்களையும் பெற்றுக் கொண்டது.

இந்த நிலையில், கிங்ஸ்ரன் நகரத்தின் 183ஆவது மேயராக வைத்தீஸ்வரன் தயாளன் பதவியேற்றார். இதற்கு முன்னர் இவர் கிங்ஸ்ரன் நகரசபையின் உறுப்பினராக இருந்துள்ளார். இவர் யாழ்ப்பாணம் தெல்லிப்பழையைச் சேர்ந்தவர். 40 ஆண்டுகளாக பிரிட்டனில் வசித்து வருகின்றார்.

இனசமத்துவத்துக்கான அமைப்பு, தமிழர் துடுப்பாட்டக் கழகம் உள்ளிட்ட சங்கங்களில் முக்கிய பதவிகளில் இருந்துள்ளார். இவர் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் ஆரம்பகால நிர்வாகச் செயலர் ரி.எம்.சி. வைத்தீஸ்வரனின் மகன் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# நீதிபதி இளஞ்செழியனை சந்தித்தார் யாழ்.தளபதி



யாழ்ப்பாணம்,மே 25

திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதியாக மாற்றலாகிச் செல்லும் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியனை யாழ் படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் தர்ஷன ஹெட்டியாராட்சி நேற்று நேரில் சந்தித்துள்ளார்.

இதன்போது மேல் நீதிமன்ற நீதிபதிக்கு மரத்தினாலான யானைச் சிலையை நினைவுச் சின்னமாக கட்டளைத் தளபதி வழங்கி வைத்தார்.

இந்த சந்திப்பு யாழ்ப்பாணம் நீதிமன்ற வளாகத்தில் நேற்று பிற்பகல் 2.30 மணியளவில் இடம்பெற்றது.

# ஆச்சரியத்தை ஏற்படுத்திய பதுளை மேயரின் செயற்பாடு

கொழும்பு,மே 25

பதுளை மாவட்டத்தை சேர்ந்த மேயரின் செயற்பாடு, இலங்கை அரசியல்வாதிகளுக்கு முன்னுதாரணமாக அமைந்துள்ளது.

மேயர் பதவிக்காக வழங்கப்பட்ட வாகனத்துக்காக ஒதுக்கப்பட்ட நிதியை பதுளை மேயர் நிராகரித்துள்ளார். அவருக்காக வழங்கப்பட்ட இரண்டு கோடி ரூபாய் பணத்தை நகர அபிவிருத்திக்காக பயன்படுத்த அவர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார். இந்த பணம் ஒதுக்கப்பட்டுள்ளமை தொடர்பில் நகர சபையில் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலில் அறிவிக்கப்பட்டது.

எனினும் பதுளை மாவட்டத்தின் புதிய மேயர் பிரியந்த அமரசிறி அந்த பணத்தை நகர அபிவிருத்திக்காக பயன்படுத்துமாறு அதிகாரிகளுக்கு பணித்துள்ளார். அதற்கான அனுமதியையும் பெற்றுள்ளார்.

அத்துடன் தற்போது உள்ள பழைய வாகனங்களில் ஒன்றை பழுது பார்த்து தனது பயன்பாட்டுக்காக வழங்குமாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

நகரத்தில் பல குறைகள் உள்ள நிலையில் தனது பயன்பாட்டிற்கு அவ்வளவு பெறுமதியான வாகனம் அவசியம் இல்லை எனவும், நகர அபிவிருத்திக்கு முதன்மை இடத்தை வழங்குமாறும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை அரசியல்வாதிகள் ஆடம்பர கார்களுக்கு இலவசம் தேடும் போதும், பதுளை மேயரின் செயற்பாடு பலருக்கும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

# வடக்கில் காடழிப்பைத் தடுக்க விசேட சுற்றுநிருபம் வெளியீடு

கொழும்பு,மே 25

வட மாகாணத்தில் உள்ள அனைத்துக் காடுகளும் அழிக்கப்படுவதைத் தடுப்பதுக்காக சுற்றுநிருபம் வெளியிடப்பட்டுள்ளதாக, அமைச்சர் கயந்த கருணாதிலக தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா முன்னதாக ஜனாதிபதியிடம் நாடாளுமன்றத்தில் எழுப்பியிருந்த கேள்வி ஒன்றுக்கு, ஜனாதிபதி சார்பில் பதில் வழங்கிய போதே அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.

வட மாகாணத்தில் காடுகளை அழிக்கும் நடவடிக்கைகளை உடனடியாகத் தடுத்து நிறுத்தவும், அவற்றை உரிய முறையில் பாதுகாக்கவும், நடவடிக்கை எடுக்க முடியும்.

வட மாகாணத்தில் ஏதாவது காடழிப்புச் செயற்பாடுகள் இடம்பெறுகின்றதா? என்பது தொடர்பில் அவதானிக்குமாறு, ஜனாதிபதி ஆலோசனை வழங்கியுள்ளார்.

இதற்கமைய, வான் படையினரும் வனபாதுகாப்பு அதிகாரிகளும் இணைந்து செயற்படுகின்றனர்.

இந்த நிலையில், காடழிப்பு செயற்பாடுகள் ஏதேனும் இடம்பெறுமாயின் அது குறித்து, வனவளப் பாதுகாப்பு திணைக்கள அதிகாரிகளுக்கு அறிவிக்குமாறும் ஜனாதிபதி ஆலோசனை வழங்கியுள்ளார்.

வடக்கின் அனைத்து வனப் பகுதிகளும், காணிகளும் ஜீபிஎஸ் எனப்படும் பூகோள இடநிலை அமைப்பு தொழில்நுட்பம் ஊடாக பாதுகாக்கப்பட்ட பகுதிகளாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த பிரதேசத்தின் வனப்பகுதிகளை பாதுகாக்கும் நோக்கில் விசேட திடீர் சுற்றிவளைப்பு பிரிவு ஒன்றை அமைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சட்டவிரோதமாக காடழிப்பு செயற்பாடுகளில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதாக வனபாதுகாப்பு கட்டளை சட்டத்தின் கீழ் அனைத்து வனப்பாதுகாப்பு அதிகாரிகளுக்கும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இதற்கமைய காடழிப்பு நடவடிக்கைகளுக்கு எதிராக செயற்பட அவர்களால் முடியும்.

இதேநேரம், கடந்த 2017 ஆம் ஆண்டு வன பாதுகாப்பு திணைக்களத்தினால் அடையாளம் காணப்பட்ட வனப்பகுதிகளில் இடம்பெறும் குற்றச் செயல்கள் தொடர்பிலும் அவர் இதன்போது குறிப்பிட்டுள்ளார்.

இதற்கமைய, வவுனியாவில் 40 அனுமதியற்ற காணி சுவீகரிப்புகளும், அனுமதியற்ற நிலையில் மரங்கள் தறிக்கப்பட்டமை தொடர்பில் 68 சம்பவங்களும் பதிவாகியுள்ளன. அத்துடன், மன்னாரில் 7 அனுமதியற்ற காணி சுவீகரிப்புகளும், அனுமதியற்ற நிலையில் மரங்கள் தறிக்கப்பட்டமை தொடர்பில் 42 சம்பவங்களும் பதிவுசெய்யப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

## இன்று நாளும் கோளும்

25.05.2018 வெள்ளிக்கிழமை விளம்பி வருடம் வைகாசி மாதம் 10 ஆம் நாள்
துவாதசி பி.ப. 07.16 வரை | சித்திரை மு.ப. 10.30 வரை | குளிகை மு.ப. 06.00-07.30
இராகுகாலம் 09.00- 10.30 | சுபநேரம் காலை 10.30 - 11.30 | எமகண்டம் 01.30 - 03.00

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| குழப்பம் | இரக்கம் | சோர்வு | கவலை | இன்பம் | துயரம் | வேதனை | ஆதாயம் | அனுகூலம் | சினம் | நன்மை | சுகம் |





# தூத்துக்குடிப் படுகொலைக்கு கிளிநொச்சியில் கண்டனம்!

கிளிநொச்சி, மே 25

தூத்துக்குடிப் படுகொலையைக் கண்டித்து, கிளிநொச்சியில் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் போராட்டம் நேற்றுக் காலை 10 மணியளவில் கிளிநொச்சி பஸ் நிலையம் முன்பாக இடம்பெற்றது.

வட, கிழக்குப் புரட்சிகர இளையோர் பேரவையால் மேற்கொள்ளப்பட்ட இந்தப் போராட்டத்தில், இளைஞர், யுவதிகள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது, தூத்துக்குடியில் உயிரிழந்த மக்களுடைய நினைவாக மெழுகுவர்த்திகள் ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்தப் போராட்டத்தில் தூத்துக்குடி வன்முறையைக் கண்டிக்கும் வகையிலால சுலோகங்களைக் கொண்ட பதாகைகளை போராட்டக்காரர்கள் ஏந்தியிருந்தனர். (ஆ)

## பதவி விலகும் ஐ.தே.க. எம்.பி

கொழும்பு, மே 25

ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினரான எம்.எச்.எம். நவவி பதவியில் இருந்து விலகுவதாக அறிவித்துள்ளார்.

அவர் தமது பதவி விலகல் கடிதத்தை நாடாளுமன்ற செயலர் தம்மிகதிசநாயக்கவிடம்கையளித்துள்ளார்.

ரிசாத் பதியுதீன் தலைமையிலான மக்கள் காங்கிரசின் சார்பில், ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியல் ஆசனத்தின் மூலம் நவவி, நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்டிருந்தார்.

உட்கட்சி முரண்பாடுகளை அடுத்தே, இவர் பதவி விலகியுள்ளார் என்று கூறப்படுகிறது. (ஆ)

### வேலியே பயிரை மேய்ந்தது:

## பொலிஸ் நிலையத்துக்குள் பாலியல் துஷ்பிரயோகம் !

வெலிஓயா, மே 25

12 வயது சிறுவன் ஒருவன் பொலிஸ் காவலில் இருந்த சந்தர்ப்பத்தில் , பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளான சம்பவம் வெலிஓயா பிரதேசத்தில் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

கடமையில் இருந்த பொலிஸ் உத்தியோகத்தரால் குறித்த சிறுவன் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டுள்ளமை வைத்திய பரிசோதனை மூலம் தெரியவந்துள்ளது.

கடந்த 8 ஆம் திகதி கூரைத் தகடுகளைத் திருடிய சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட குறித்த சிறுவன், பதவியா நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்துவதற்காக பொலிஸ் காவலில் வைக்கப்பட்டிருந்தார். இந்த நிலையிலேயே, அவர் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டுள்ள குறித்த பொலிஸ் உத்தியோகத்தர், இந்தச் சம்பவம் தொடர்பில் வெளியில் தெரிவித்தால் துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்துவிடுவேன் எனப் பாதிக்கப்பட்ட சிறுவனை அச்சுறுத்தியுள்ளார் என விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

வட மத்திய மாகாண சிறுவர் இல்லத்தில் குறித்த சிறுவனைச் சேர்க்குமாறு, கெப்பதிக்கொல்லாவ மாவட்ட நீதிமன்ற நீதிபதி மனோஜ் பிரபாகரன் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார். (ஆ)

## வெட்டுக்காயங்களுடன் முல்லையில் சடலம் மீட்பு!



முல்லைத்தீவு , மே 25

முல்லைத்தீவு செல்வபுரம் பனங்கூடல் பகுதியில், வெட்டுக்காயங்களுடன் நேற்றுமுன்தினம் இரவு இளைஞன் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

கள்ளப்பாடு வடக்கு முல்லைத் தீவைச் சேர்ந்த 28 வயதுடைய வரதராஜா சதாநிசன் என்ற இளைஞனின் சடலமே மீட்கப்பட்டுள்ளது.

குறித்த இளைஞன் மாலைவரை வீடு திரும்பாத நிலையில், குடும்பத்தினர் அவரைத் தேடியுள்ளனர்.

இந்த நிலையில், செல்வபுரம் கள்ளுத்தவறணைப் பகுதியில் உள்ள பனங்கூடலுக்குள் மோட்டார் சைக்கிள் ஒன்று மாலை வரை நின்றுள்ளதை அவதானித்த அயலவர்கள், முல்லைத்தீவு பொலீஸாருக்கு தகவல் வழங்கினர்.

இதனை அடுத்து, சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார், வெட்டுக்காயங்களுடன் உயிரிழந்த நிலையில் கிடந்த, இளைஞனின் சடலத்தை மீட்டுள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பில் முல்லைத்தீவு பொலிஸார் மற்றும் குற்றத் தடுப்பு பிரிவினர் ஆகியோர் இணைந்து பல்வேறு கோணங்களில் விசாரணைகளைமேற்கொண்டுள்ளனர்.

இளைஞனின் கழுத்துப் பகுதியில் வெட்டுக்காயம் இருப்பதால் இது திட்டமிட்ட கொலையாக இருக்கும் என சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது. (ஆ)

## 60 வீத மாணவர்கள் போதைக்கு அடிமை!

குருநாகல், மே 25

குருநாகல் மாவட்டத்தில் மாத்திரம், 15 - 19 வயதுக்கு இடைப்பட்ட பாடசாலை மாணவர்களில் 60 வீத மானவர்கள் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகி உள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மது, சிகரெட், கஞ்சா, குடு மற்றும் போதை மாத்திரைப் பாவனை என்பன குருநாகல் மாவட்ட பாடசாலை மாணவர்களிடையே பரவலாக காணப்படுகின்றது என்று போதைப் பொருள் பாவனையில் இருந்து நிவாரணம் அளிப்பது தொடர்பிலான செயலணியின் பணிப்பாளர் டொக்டர் சமந்த திதலவ ஆரச்சி தெரிவித்துள்ளார்.

"இவற்றைப் பயன்படுத்துவதால் ஞாபக சக்தி அதிகரிக்கும் என்பதோடு, நித்திரை குறைவடையும் என வியாபாரிகள் மாணவர்களின் மனதை மாற்றி, அவற்றை விற்பனை செய்கின்றனர். " என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஆ)

## மீண்டும் டெங்கு நோய்!

கொழும்பு, மே 25

நாட்டின் பல பகுதிகளில் டெங்கு நோய் பரவல் மீண்டும் அதிகரித்துள்ளதாக தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

வாரம் ஒன்றுக்கு 200 டெங்கு நோயாளர்கள் வைத்தியசாலைகளில் பதிவு செய்யப்படுகின்றனர் என்று தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவின் பொதுவைத்திய நிபுணர் ப்ரஷீலா சமரவீர தெரிவித்துள்ளார்.

மேல், வடமேல், சப்ரகமுவ மாகாணங்களிலேயே அதிக டெங்கு நோயாளர்கள் உள்ளனர் எனவும் அவர் சுட்டிக்காட்டி உள்ளார்.

இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் டெங்கு நோயால் 16 பேர் உயிரிழந்துள்ளதுடன், 18 ஆயிரம் பேர்வரை டெங்கு நோயால்பாதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஆ)

### வெள்ளப் பாதிப்பு:

## இலவச சட்ட ஆலோசனை!

வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களின் ஆவணங்களில் திருத்தங்கள் மேற்கொள்ளும் போது தேவைப்படும் சட்ட ஆலோசனைகள் மற்றும் சேவைகளை இலவசமாக வழங்குவதற்கு இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தீர்மானித்துள்ளது.

அதன்படி சட்ட ஆலோசனைகள் தேவைப்படும் நபர்கள் 0777235363 அல்லது 0113123872 என்ற தொலைபேசி இலக்கங்களைத் தொடர்புகொள்ளுமாறு இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் யு.ஆர்.த. சில்வா தெரிவித்துள்ளார். (ஆ)

## சின்னம்மைத் தொற்று: வேளாண்மை பீடம் பூட்டு!

சாலியபுர, மே 25

ரஜரட்ட பல்கலைக்கழகத்துக்கு உரித்தான சாலியபுரவில் உள்ள வேளாண்மைப் பீடத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு, சின்னம்மைத் தொற்று ஏற்பட்டுள்ளமையால் அந்தப் பீடம் இரண்டு வாரங்களுக்கு மூடப்பட்டுள்ளது.

சின்னம்மைத் தொற்று ஏனைய மாணவர்களையும் பாதித்துவிடக் கூடாது என்ற முன்னெச்சரிக்கையின் பிரகாரமே, அந்தப் பீடத்தை இரண்டு வாரங்களுக்கு மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பல்கலைக் கழக நிர்வாகம் அறிவித்துள்ளது.

சாலியபுரவில் உள்ள வேளாண்மைப் பீடத்தில் 350 மாணவர்கள் பயில்கின்றனர். அந்த மாணவர்கள் அனைவரும் தங்களுடைய விடுதிகளில் இருந்து நேற்றுமுன்தினம் மாலை வெளியேறி உள்ளனர். (ஆ)

## விளையாட்டுக் கழகத்துக்கு உபகரணங்கள் வழங்கல்!

கிளிநொச்சி, மே 25

கிளிநொச்சி - புலோப்பளை கிழக்கு சென். பீற்றஸ் விளையாட்டுக்கழகத்துக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வு, பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலகத்தில் நேற்று இடம்பெற்றது.

நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரனின் சென்ற ஆண்டுக்கான பன்முகப் படுத்தப்பட்ட நிதியின் மூலம் இந்த உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வில் பச்சிலைப்பள்ளி பிரதேச சபை தவிசாளர் சு.சுரேன், பிரதேச சபை உறுப்பினர்களான வீரவாகுதேவர், கோகுல் மற்றும் விளையாட்டு உத்தியோகத்தர் போல்ராஜ் விளையாட்டுக்கழக உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஆ)



## அர்ஜுன சிங்கப்பூரில்?

கொழும்பு, மே 25

இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன மஹேந்திரன் சிங்கப்பூரில் இருப்பதாக, சர்வதேச பொலிஸின் (இன்டர்போல்) சிங்கப்பூர் கிளை, குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு அறிவித்துள்ளதாக கோட்டை நீதிவான் நீதிமன்றம் அறிவித்துள்ளது. (ஆ)

## 2020 ஆம் ஆண்டில் கண்ணிவெடியற்ற வடக்கு, கிழக்கு!

கொழும்பு, மே 25

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் எதிர்வரும் 2020 ஆம் ஆண்டுக்குள், யுத்த காலத்தின்போது புதைக்கப்பட்ட கண்ணி வெடிகளை முழுமையாக அகற்றி, அந்தப் பகுதிகளில் மக்களை மீள்குடியேற்றுவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்போம் என மீள்குடியேற்றம், புனர்வாழ்வு மற்றும் இந்து கலாசார அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் தெரிவித்தார்.

முகமாலையைச் சேர்ந்த 300 குடும்பங்களும் எப்போது மீள்குடியேற்றப்படுவர் என ஈ.பி.டி.பி.யின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா நேற்று நாடாளுமன்றில் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

"கிளிநொச்சி மாவட்டம் பச்சிலைப் பள்ளி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட அரசன்கேணி, வேம்படுகேணி, கிளாலி, முகமாலை ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில், நிலக்கண்ணி வெடி ஆபத்துள்ள பிரதேசங்கள் தவிர்ந்த ஏனைய அனைத்துப் பிரதேசங்களிலும் இடம்பெயர்ந்த மக்களை மீள்குடியேற்றும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. இருப்பினும் முகமாலை முன்னரங்குப் பகுதியில் யுத்த காலத்தின் போது அதிகளவான நிலக்கண்ணிவெடிகள் பல அடுக்குகளாகப் புதைக்கப்பட்டுள்ளன. இதனால், அவற்றை மிக விரைவில் அப்புறப்படுத்தி மக்களை மீள்குடியேற்றுவதில் பாரிய சிரமம் ஏற்பட்டுள்ளது. எனினும், உலக நாடுகளின் கண்ணிவெடிகள் அகற்றும் அமைப்புகளுடன் இணைந்து கண்ணிவெடிகளை அகற்றும் நடவடிக்கைகளை மேற்கொள்ளப்பட உள்ளது." என்று அவர் தெரிவித்தார். (ஆ)

# அனர்த்தப் பலி தொடர்பில் தவறான செய்தி வெளியீடு!

### அனர்த்த முகாமைத்துவம் அதிருப்தி

கொழும்பு, மே 25

நாட்டில் நிலவி வரும் சீரற்ற கால நிலையால், உயிரிழந்தோர் தொடர்பில் சில ஊடகங்கள் தவறான தகவல்களை வழங்கி வருவதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையப் பணிப்பாளர் நாயகம் எஸ்.அமல நாதன் தெரிவித்தார்.

"மின்னல் தாக்கம், காற்று, மண்சரிவு, வெள்ளம் என்பவற்றின் காரணமாக இதுவர் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 11 ஆகும்.

எனினும் இவ்வாறு உயிரிழந்தவர்களின் எண்ணிக்கையை சில ஊடகங்கள் தவறாக வெளியிடுகின்றன. இவை தொடர்பில் அனைத்து ஊடகங்களும் மிகுந்த அவதானத்துடன் செயற்பட வேண்டும்.

அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தில் பதிவு செய்யப்பட்டு அறிவிக்கப்படுகின்ற எண்ணிக்கையைத் தான் ஊடகங்கள் அறிவிக்க வேண்டும்." எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஆ)



## பதில் நீதியரசராக ஈவா நியமனம்!

கொழும்பு, மே 25

உயர் நீதிமன்ற நீதிபதி ஈவா வனசுந்தர பதில் நீதியரசராக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் ஜனாதிபதி முன்னிலையில் அவர் நேற்றுமுன்தினம் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

ஜனாதிபதி செயலாளர் ஒஸ்டின் பெர்னாண்டோவும் இதன்போது பிரசன்னமாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஆ)

# தேயிலை உற்பத்தியாளர்களுக்கு சலுகை வழங்கப்பட வேண்டும்!

நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்காக தேயிலை உற்பத்தி மூலம் பாடுபடும் மக்களுக்கு நியாயமான சலுகைகளும், உரிமைகளும் பெற்றுக் கொடுக்கப்பட வேண்டும் என்று மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன் நெத்தி தெரிவித்துள்ளார். நாடாளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை இலங்கைத் தேயிலைச் சபை (திருத்தச்சட்டம்) சட்ட மூலம் மீதான இரண்டாவது மதிப்பீடு குறித்த விவாதம் இடம்பெற்றது. இதில், கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

"இலங்கையின் தேயிலை உற்பத்தியில் 'சிலோன் டீ' என்ற பெயரைத் தக்கவைக்க அல்லது பிரபல்யப்படுத்த அதற்கான அறவீடு ஒன்றை முன்னெடுத்து வருகின்றனர். ஒரு கிலோ கிராம் தேயிலைக்கு 3.50 ரூபா பணத்தைத் தேயிலை ஊக்குவிப்பு நிதியும் அறவிட்டு வருகின்றது.

இவ்வாறு அறவிடப்படும் இந்த நிதியின் மூலமாக என்ன நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன?

இலங்கைத் தேயிலையின் நாமத்தைப் பிரபல்யப்படுத்த அறவிடும் தேயிலை ஊக்குவிப்பு நிதியத்தின் மூலமாக, அதற்காகப் பாடுபடும் மக்களுக்காக எவ்வாறான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன?" என்று அவர் கேள்வியெழுப்பினார். (ஆ)

# கர்ப்பிணி ஆசிரியைகளுக்கு புதிய உடை அறிமுகம்

கொழும்பு, மே 25

கர்ப்பிணி ஆசிரியைகளுக்கான புதிய உடை நேற்று முதல் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. அத்துடன் அதற்கான சுற்று நிருபம் வெளியிடும் நிகழ்வு கல்வியமைச்சில் இடம்பெற்றது.

நாடளாவிய ரீதியில் பாடசாலைகளில் தற்போது கற்றல் கற்பித்தல் பணிகளில் 2 இலட்சத்து 36 ஆயிரம் ஆசிரியர்கள் ஈடுபட்டுள்ளனர். இவர்களில் ஒரு இலட்சத்து 72 ஆயிரம் பெண் ஆசிரியைகள் உள்ளனர். இதில், வருடாந்தம் சுமார் 10 ஆயிரம் ஆசிரியைகள் மகப்பேற்று விடுமுறையில் செல்கின்றனர் என்று கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.

இவ்வாறான கர்ப்பிணி ஆசிரியைகளுக்காக சுமார் 6 வடிவங்களில் ஆடைகள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. கர்ப்ப காலத்தில் இறுதி ஒரு சில மாதங்களுக்குள் ஏற்படக்கூடிய உடல் சார்ந்த சிரமங்களைக் கருத்தில் கொண்டே இந்த ஆடைகள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன.

மேலும், கர்ப்ப காலத்தில் மிகவும் வினைத்திறனான சேவையை வழங்குவதற்குப் பொருத்தமான வகையிலும், தொழிலின் கௌரவத்துக்குப் பாதிப்பு ஏற்படாத வகையிலும் இலகுவான ஆடைகளை அறிமுகப்படுத்துவதே



இதன் நோக்கமாகும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், இந்த ஆடை கட்டாயமல்ல என்பதுடன் கர்ப்ப காலத்தில் ஆசிரியைகளின் விருப்பத்துக்கமைய பயன்படுத்த முடியும் என்றும், இதற்குப் புறம்பாக பல்வேறு பட்ட அலங்கார வடிவமைப்புக் கொண்ட ஆடைகளைப் பயன்படுத்த முடியாது என்றும் கல்வியமைச்சு தெரிவித்துள்ளது. (ஆ)



## ஒரு சீனத் தேவதை கனவில் வந்தால்(ள்)...

கொழும்பு நகரத்திற்கெண்டு ஒரு கடற்கரை இதுவரை இல்லை. இப்ப வரப்போகுது பாருங்கோ. இலங்கை மக்கள் பாவம் எண்டிட்டு எங்கடை அரசாங்கத்தால் ஒரு துறைமுக நகரத்தைக் கட்டிக்குடுப்பம் எண்டு வெளிக்கிட்டம். மகிந்தாவும் இலங்கை மக்களிலை நல்ல அக்கறை உள்ள ஆள் எண்டபடியாலை அதுக்கு அனுமதியும் தந்தார். ஆனால் புதுசா வந்த ஆக்களுக்கு அது தெரியாமல் அந்த மனுசனைப் பற்றி இல்லாதது பொல்லாதது எல்லாம் சொல்லிக் கெடுக்கப் பாத்தினம். ஆனால் பிறகு எங்களோடை கதைச்சினம். விசியம் விளங்கிவிட்டுது. அதாலை சரி கட்டுங்கோவன் எண்டு சொல்லிப்போட்டினம். இப்ப கட்டிக்கொண்டிருக்கிறம். கட்டி முடியட்டும் பாருங்கோவன். என்ன மாதிரி இருக்கும் எண்டு. இஞ்சை எத்தினைபேருக்கு அதாலை வேலை கிடைக்கும். எத்தினை குடும்பம் அதாலை சீவிக்கும். இலங்கைக்கு எல்லாவிதத்திலையும் நன்மைதான். ஒண்டும் கேடு வரப்போகுதில்லை. துறைமுகநகரம் வந்த உடனை அதைச் சுற்றி இருக்கிற இடத்தை இலங்கைச் சனம் பிழங்க விடுவம். அதாலை அவைக்கு ஒரு புதுக் கடற்கரை வரும். அங்கை அவை உருண்டு பிரண்டு குஸ்திபிடிச்சு எத்தினை விளையாட்டு விளையாடப்போகினம் எண்டு பாருங்கோவன்.

பேந்தும் சத்தியம் பண்ணிறன். உதாலை எங்கடை சீன அரசாங்கத்துக்கு ஒரு சதமும் இலாபம் இல்லை. எல்லாம் உங்களுக்குத்தான். சத்தியமா அதுக்கை மசாஜ் கிளப்பு வராது. பாலியல் தொழில் வராது. சூதுவாது வராது. களியாட்டம் வராது. கசினோ வராது. காசு விளையாட்டு வராது. வெளி நாட்டிலை இருந்து வாற சனம் ஆசுவாசப்பட ஏதேன் கடை கண்ணி இருக்கும். அவ்வளவுதான். மிஞ்சி மிஞ்சிப் போனால் கொஞ்சச் சைனாச் சாப்பாட்டுக்கடையும், சலூனும், உடம்பு உளைவெடுக்கிற மூலிகை முழுக்கும் எண்டு கொஞ்சக் கடையள் போடுவினம். அவ்வளவுதான். இப்பிடியான கடையளிலை வேலை செய்யச் சத்தியமா இலங்கைப் பொம்பிளையளை விடமாட்டம். அதுக்கும் சைனாவிலை இருந்துதான் பெண்டுகளைக் கொண்டு வாறதா அங்கை கதைச்சனாங்கள். கொஞ்சப் பேரை அங்கை நிண்டு கொண்டு வந்து இஞ்சை உள்ள ஆக்களுக்குத் தொழில் பழக்கிப் போட்டு பிறகு அவையளைக் கொண்டு போயிடுவம். அப்பிடிக் கொண்டு வாறவை இஞ்சை உள்ள ஆக்களைக் கட்டப் போறம். இஞ்சையே நிக்கப் போறம் எண்டு சொன்னால் அவையளை மறியம். அவையின்ரை விருப்பத்துக்கு விடுவம். அப்பிடி இருந்தால்தானே சீன – இலங்கை உறவு வலுப்படும். என்ன?

இப்ப முதல் கட்டமா ஒரு ஐம்பதைக் கொண்டு வாறதாத்தான் திட்டம். பிறகு பத்தாட்டி இன்னுமொரு ஐம்பது. பிறகும் பத்தாட்டி இன்னுமொரு ஐம்பது. சீனாவிலைதானே என்னத்துக்குப் பஞ்சம் எண்டாலும் சனத்துக்குப் பஞ்சமில்லை. வேணுமானதைக் கொண்டு வந்து இறக்குவம். எங்களுக்கு வேணும் இலங்கை மக்கள் கயிட்டப்படாமைச் சீவிக்க வேணுமெண்டுதான். அப்பிடி நாங்களும் மகிந்தா ஐயாவும் வலு ஆழமாச் சிந்திக்க புதுசா வந்த மைத்திரி ஆக்கள் அதுக்கு கை கால் வைச்சு வால் கட்டி ஊதிப் பெருப்பிச்சு எத்தினை கதை? ஆனால் சனம் நம்பிறமாதிரி இல்லை. இப்ப பாருங்கோவன் அம்பாந்தோட்டை துறைமுகத்துக்குக் கிட்டவா இருக்கிற தீவையும் எடுத்து அந்தமாதிரி இலங்கையை அழகுபடுத்தி, பாதுகாப்பா வைச்சிருப்பம். எல்லாம் இலங்கை மக்கள் சந்தோஷமா இருக்கத்தான் செய்யிறமே ஒழிய எங்கடை சந்தோஷத்துக்காக அல்ல......

நேற்றைக்கு ராத்திரி நான் வெள்ளையின்ர கடையிலை சீனி வாங்கின பேப்பரிலை "இலங்கையில் சீன ஆக்கிரமிப்பா? இந்தியா கவலை" எண்டு ஒரு செய்தித் தலைப்பைப் பாத்தன். அப்பிடியே நித்திரையாப் போனன். கனவிலை ஒரு சீனத் தேவதை வந்து உதைச் சொன்ன மாதிரி ஒரு கனவு கண்டனான். அவ்வளவுதான். ஙி...ஙி...ஙி..............

- வில்லங்கம் விநாசி

# உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி



கரவெட்டி,மே 25

கரவெட்டி, கரணவாய் கிழக்கில் மின்சாரம் தாக்கி தந்தையும் மகனும் நேற்றுமுன் தினம் உயிரிழந்திருந்தனர்

வீட்டில் டிஷ் ரிவி வேலை செய்யாத காரணத்தால், கேபிள் ரீவி இணைப்பிலில் வயரைப் பொருத்த முற்பட்ட போது, அதி உயர் மின் அழுத்தம் தாக்கியதிலேயே தந்தையும் மகனும் உயிரிழந்திருந்தனர் யாழ்ப்பாணம் நகரில் வானகம் அலைபேசி விற்பனையாளரான ஜெகனாந்தன் (வயது- 50), சஞ்சீவன் (வயது- 29) ஆகிய இருவருமே உயிரிழந்திருந்தனர் .

நெல்லியடி பலநோக்கு கூட்டுறவு சங்க தலைவராகவும் அமரர் ஜெகானந்தன் பணிபுரிந்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

கரவெட்டி பிரதேச சபை உறுப்பினர்கள் நேற்று உயிரிழந்த இருவருக்கும் இறுதி அஞ்சலி செலுத்தியதோடு உயிரிழந்த குடும்ப உறவினர்களுக்கு ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்தனர்.

# தொடர்ச்சிகள்

## இலங்கைப்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதற்கமைய, போரின்போது இலங்கை படையினருடன் பிரித்தானிய அரசாங்கம் இணைந்து பணியாற்றியமைக்கான எவ்வித ஆதாரங்களும் தற்போது பிரித்தானிய அரசாங்கத்திடம் இல்லை என்று பொருள்படும் என்று த காடியன் சுட்டிக்காட்டியுள்ளது.

ஏற்கனவே கென்யாவில் பிரித்தானியா நடத்திய தாக்குதல் தொடர்பான ஆவணங்களையும் அந்த நாட்டு அரசாங்கம் அழித்தமையை த காடியன் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த நிலையில், இலங்கை போருடன் தொடர்புடைய ஆவணங்களை அழித்தமை தொடர்பில் பிரித்தானிய வெளியுறவு அமைச்சிடம் காடியன் வினவியுள்ளது.

இதன்போது, அவ்வாறான அவசியம் இல்லை என்று பிரித்தானிய வெளியுறவு அமைச்சினால் பதிலளிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி 1978 முதல் 1980 வரையிலான காலப்பகுதியில் விடுதலைப்புலிகள் தொடர்பான 195 ஆவணங்களை பிரித்தானியா அழித்துள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகக் காடியன் குறிப்பிட்டுள்ளது.

குறித்த ஆவணங்களில் சுமார் ஒரு இலட்சம் அரிய நூல்களைக் கொண்டிருந்த யாழ்ப்பாண நூலகம் 1981ஆம் ஆண்டு எரியூட்டப்பட்ட வரலாற்று ஆவணமும் உள்ளடங்குவதாக கருதப்படுகிறது.எனினும் எப்போது எங்கே வைத்து இந்த ஆவணங்கள் அழிக்கப்பட்டன என்பதை பிரித்தானிய வெளியுறவு அமைச்சு தெரிவிக்கவில்லை.

இந்தநிலையில் குறித்த வரலாற்று ஆவணங்கள் அழிக்கப்பட்டமையை ஆட்சேபித்து இலங்கை தொடர்பான நிபுணரும் குற்றவியல்துறை நிபுணருமான ரிச்சல் செய்ஹ் என்பவர், ஐக்கிய நாடுகளின் யுனெஸ்கோ அமைப்பிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

அழிக்கப்பட்ட ஆவணங்களின் தலைப்புகளை வெளிவிவகாரப் பணியகம் பாதுகாக்கின்றது. அதன்படி, பாதுகாப்பு ஒத்துழைப்பு, ஆயுதங்கள் விற்பனை, வெளிநாட்டு உதவி, அரசியல் புகலிடக் கோரிக்கைகள் என்பன போன்ற முக்கியமான விடயங்களை உள்ளடக்கிய விரிவான ஆவணங்கள் அழிக்கப்பட்டுள்ளமை தெரிய வந்துள்ளது.

அதேவேளை, பிரித்தானிய பாதுகாப்பு திணைக்களத்தின் ஆவணக் காப்பகத்தில் உள்ள சில ஆவணங்களின் படி, இலங்கையின் தமிழ் அமைப்புகளின் ஆயுதக் கிளர்ச்சியை கட்டுப்படுத்துவதற்கு, பிரித்தானியாவின் எம்ஐ 15 மற்றும் எஸ்ஏஎஸ் அமைப்புகள், நிபுணத்துவ ஆலோசனைகளை வழங்குவற்காக அனுப்பப்பட்டமை குறித்த தகவல்கள் இடம்பெற்றுள்ளன.

இவர்கள் இலங்கை கொமாண்டோக்களுக்கு பயிற்சிகளையும், ஆலோசனைகளையும் வழங்கியிருந்தனர்.

எனினும், இவை தொடர்பான விரிவான விபரங்களை உள்ளடக்கிய பிரித்தானிய வெளிவிவகாரப் பணியகத்தின் ஆவணங்கள் அழிக்கப்பட்டு விட்டதாகவும், 'தி கார்டியன்' சுட்டிக்காட்டியுள்ளது.

## நினைவு... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆண்டில் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகின்ற ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்கு தயார்.

எனினும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்கு எனது சகோதரரும் முன்னாள் ஜனாதிபதியுமான மஹிந்த ராஜபக்சவின் அனுமதி தேவைப்படுகிறது.

ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டால் முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்சவின் உதவியும் அதிகமாக கிடைக்கும். இதற்காக ஒன்றிணைந்த எதிரணி உட்பட பலர்து ஒத்துழைப்புக்களும் கிடைக்கும்.

மஹிந்த ராஜபக்ச தமிழ் மக்களின் வாக்குகளால் தோற்கடிக்கப்பட்டார். அதேபோல முஸ்லிம் மக்களுக்குள் கொண்டுசெல்லப்பட்ட பிழையான சிந்தனைகளால் அவர்களும் பின்வாங்கினார்கள். அதனை அவர்கள் பல தருணங்களில் உணர்ந்துகொண்டதோடு அதனை தெளிவுபடுத்தவும் முயற்சி செய்தேன்.

இந்நிலையில் எனக்கு தமிழ் பேசும் மக்களின் ஆதரவு கிடைக்கும் என்று அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

## யாழில் சட்டவிரோத... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளாமல் சட்டவிரோதமாக கேபிள் ரீவி இணைப்புகள் வழங்கப்படுகின்றன.

அவற்றை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் அதிகாரிகள் கொழும்பிலிருந்து வந்து முன்னெடுக்கவுள்ளனர்.

ஆணைக்குழுவின் இந்த நடவடிக்கைக்கு யாழ்ப்பாணம் பொலிஸாரின் சேவையையும் பெற்றுக்கொள்ள வேண்டும்.

யாழ்ப்பாணம் பொலிஸாரின் உதவியைப் பெற்று இந்த சட்டவிரோத நடவடிக்கையைக் கட்டுப்படுத்த நீதிமன்று அனுமதி வழங்கவேண்டும் என்று தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவால் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் நேற்றுமுன்தினம் விண்ணப்பம் செய்யப்பட்டது.

அதனை ஆராய்ந்த நீதிவான் சின்னத்துரை சதீஸ்தரன், சட்டவிரோத கேபிள் ரீவி இணைப்புக்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க அனுமதி வழங்குவதாகக் கட்டளை வழங்கினார்.

இதன்மூலம் யாழ்ப்பாணம் மாநகரம் மற்றும் நல்லூர் பிரதேசம் உள்பட்ட பகுதிகளில் சட்டவிரோத கேபிள் இணைப்புக்கள் துண்டிக்கப்படும் என தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு தெரிவித்தது.

## வவுனியாவில்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தகவல் அடிப்படையில் சோதனை மேற்கொண்ட பொலிசார் யாழ்ப்பாணம் தாளையடியைச் சேர்ந்த கணேசலிங்கம் கோகிலம் (வயது 44) எனும் பெண் ஒருவரை சந்தேகத்தில் கைது செய்துள்ளனர்.

இதன்போது அவரிடமிருந்து 4கிலோ 62கிராம் கேரளா கஞ்சாவினை மீட்டுள்ளதாகவும், குறித்த கஞ்சாவினை ஹொரவப்பொத்தான பகுதியில் நபர் ஒருவருக்கு வழங்குவதற்கு எடுத்துச் சென்றுள்ளதாக விசாரணைகளின் போது தெரிவித்துள்ளார்.

மேலதிக விசாரணைகளின் பின்னர் நீதவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் பொலிசார் மேலும் தெரிவித்துள்ளார்.

## கொக்குத்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உயர் தரத்தை தொடர்வதுக்காக 10 கிலோ மீற்றர்களுக்கு அப்பால் சென்றுவரவேண்டிய நிலை காணப்பட்டது.

இந்நிலையில் இது வரை இந்தப்பாடசாலை எவராலும் கண்டுகொள்ளப்படாத காரணத்தினால் கொக்குத்தொடுவாய் கிராமத்தை சூழ உள்ள ஆறு கிராமங்களைச் சேர்ந்த மாணவர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டனர். மாணவர்களின் எதிர்கால கற்றல் செயற்பாடுகளை கருத்தில் கொண்டு கொக்குத்தொடுவாய் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை 1சி தரத்திற்கு உயர்த்தப்பட்டு முதன் முதலாக அங்கு உயர்தர வகுப்புக்கள் நேற்று வடமாகாண கல்வி அமைச்சினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் கடந்த காலங்களில் பாடசாலையின் அடைவு மட்டத்தை தேசிய ரீதியிலும் மாகாண, மாவட்ட, வலய ரீதியிலும் உயர்த்துவதற்காக சிறப்பாக செயற்பட்ட மாணவர்கள் ஆசிரியர்கள் கௌரவிக்கப்பட்டனர். நிகழ்வில் வடமாகாண கல்வி அமைச்சர் கலாநிதி க.சர்வேஸ்வரனுடன் வடக்கு மாகாணசபை உறுப்பினர் து.ரவிகரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## ஈ.பி.எவ்.... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போது ஏற்படும் அசௌகரியங்களிலிருந்து விடுபட முடியும் எனவும் அவர் கூறியுள்ளார்.

தற்பொழுது ஈ.பி.எப். நிதியத்தில் 2 ஆயிரம் பில்லியன் ரூபாவும், ஈ.ரி.எப்.நிதியத்தில் 286 பில்லியன் ரூபாவும் காணப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தனியார் துறையில் எமது நாட்டில் 80 லட்சம் ஊழியர்கள் பணி புரிந்தாலும், அதில் 26 லட்சம் பேர் மாத்திரமே இந்த நிதியத்திற்கு உரிய முறையில் நிதியைச் செலுத்தி வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதுவரையில் நிதியத்துடன் தொடர்பற்று இருப்பவர்களை இணைத்துக் கொள்வதற்கு தொழிலாளர் திணைக்களம் விசேட வேலைத்திட்டமொன்றை முன்னெடுத்துள்ளதாகவும் அமைச்சர் அறிவித்துள்ளார்.

## குறூப் 16... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்துள்ளார்.

"ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவே சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராக இருக்கிறார். கூட்டு எதிரணியில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியைச் சேர்ந்தவர்கள் தான். சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் என்ற வகையில், கட்சியின் தலைவரான மைத்திரிபால சிறிசேனவின் கீழ் இருந்தாலும், எதிர்க்கட்சிஉறுப்பினர்கள் என்ற வகையில் மகிந்த ராஜபக்சவின் தலைமையில் இணைந்து செயற்படுவோம்.

இது ஒன்றும் புதிய விடயம் அல்ல. சந்திரிகா குமாரதுங்க அதிபராக இருந்த போது, மகிந்த ராஜபக்ச எதிர்க்கட்சித் தலைவராக இருந்தவர். இரண்டு பேருமே சிறிலங்கா சுதந்திரக் கட்சியினர் தான்" என்றும் அவர் தெரிவித்தார்.

## மகிந்த - மங்கள... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பில் கருத்து வெளியிட்ட நிதி அமைச்சர் மங்கள சமரவீர, கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தம்மைச் சந்திக்க வந்திருந்ததாக தெரிவித்திருந்தார்.

அவ்வாறான செய்திகளில் எந்த உண்மையுமில்லை.

இவ்விடயம் தொடர்பாக இடம்பெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்திலும் கலந்துரையாடப்பட்டது.

எனினும் முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவை மங்கள சமரவீர சந்தித்தமைக்கான ஆதாரங்கள் எம்மிடம் இருக்கின்றன' என மஹிந்தானந்த அளுத்கமகே மேலும் தெரிவித்துள்ளார்.

## ஞானசாரர்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெற்றுக் கொள்ளப்பட்டதுடன், எதிர்வரும் ஜூன் 14ம் திகதி அவரை அடையாளப்படுத்தல் மற்றும் தண்டனை வழங்குவதற்கும் நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

கடந்த 2016ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 25ஆம் திகதி ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொடவின் வழக்கு ஹோமாகம நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, அவரது மனைவியான சந்தியா எக்னெலிகொடவினை அச்சுறுத்தியதாக ஞானசாரருக்கு எதிராக ஹோமாகம பொலிஸாரால் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கோப்பாய்.. (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உயிரிழந்த முதியவர், கோப்பாய் சந்தி ஊடாக யாழ்ப்பாணம் நோக்கி மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த போது, பின்புறமாக வந்த கன்டர் வாகனம் மோதியுள்ளது. படுகாயமடைந்த நிலையில் கோப்பாய் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியில் அவர் உயிரிழந்துள்ளார்.

## மகிந்தவிடம்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

நேற்று கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் பொதுச் செயலாளரை மிக விரைவில் அந்த பதவியில் இருந்து நீக்கவேண்டும்.

"தேசிய அரசாங்கத்திலிருந்து வெளியேறிய 16 உறுப்பினர்களும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தலைமைத்துவத்திலான கூட்டு எதிரணியில் இணைந்து கொண்டுள்ளோம்.

இருப்பினும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் கொள்கைகளை கருத்திற் கொண்டே செயற்படுவோம் கட்சிக்கு எதிராக ஒருபோதும் செயற்பட மாட்டோம்.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியினை பலப்படுத்தி முறையற்ற நிர்வாகத்தினை மேற்கொள்ளும் ஐக்கிய தேசிய கட்சிக்கு எதிராக செயற்படுவதை நோக்கமாகக் கொண்டே பொது எதிரணியுடன் இணைந்து கொண்டோம்.

2020 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் ஜ்னாதிபதி மைத்திரிபால சிறிசேன வெற்றிபெற வேண்டுமாயின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் அனைவரும் ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைந்த அரசாங்கத்திலிருந்து வெளியேற வேண்டும்.

எதிர்காலத்தில் ஐக்கிய தேசிய கட்சிக்கு எதிராக மேற்கொள்ளப்படும் அனைத்து போராட்டங்களுக்கும் பொது எதிரணியுடன் இணைந்து ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியின் உறுப்பினர்களாக செயற்படுவோம்" என்று தெரிவித்தார்.

## யாழில் மாணவர்க... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பற்றப்பட்டதுடன் குறித்த நபர்கள் இருவரையும் கைதுசெய்துள்ளனர்.

31 மற்றும் 29 வயதுடைய இருவரே கைது செய்யப்பட்டதுடன், இருவரும் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதுடன், விசாரணைகளின் பின்னர் யாழ்ப்பாணம் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளதாக யாழ்ப்பாணம் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

## அணு ஆயுதக் கூடம் தகர்ப்பு:

# தென்கொரிய நிருபர்களுக்கு இறுதி நேரத்தில் கிம் அனுமதி!

பியாங்யாங், மே 25

அணு ஆயுதச் சோதனைக் கூடம் தகர்க்கப்படுவதைப் பார்வையிட சர்வதேச நிருபர்களுக்கு வடகொரியா அனுமதி அளித்தது. இந்த நிலையில், இறுதி நேரத்தில் தென் கொரிய நிருபர்களுக்கும் இந்த அனுமதி வழங்கப்பட்டது. வடகொரியாவின் இந்த நடவடிக்கையைத் தென் கொரிய ஒருங்கிணைப்புத் துறை அமைச்சகம் வரவேற்றுள்ளது.

தென் கொரியாவின் முயற்சியால், வடகொரிய ஜனாதிபதி கிம் ஜோங் உன் - அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் ஆகியோருக்கு இடையே எதிர்வரும் ஜூன் மாதம் 12 ஆம் திகதி சிங்கப்பூரில் பேச்சுவார்த்தை நடக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கிடையில், தென் கொரியா - அமெரிக்கா ஆகிய நாடுகளின் போர்ப் பயிற்சி கொரிய தீபகற்பத்தில் தொடங்கியது. இதற்கு கிம் கடும் எதிர்ப்புத் தெரிவித்தார். பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ள மாட்டேன் என்றும் எச்சரித்தார்.

அத்துடன், அணு ஆயுதங்கள், சோதனைக் கூடங்கள் ஆகியவற்றை வடகொரியா முற்றாக அழிக்க வேண்டும் என்று ஜனாதிபதி ட்ரம்ப் கூறியிருந்தார். இதற்கும் கிம் தனது எதிர்ப்பை வெளியிட்டார். எனினும், "அணு ஆயுதச் சோதனையைத் தொடர்ந்தும் நடத்துவதில்லை என்று உறுதி எடுத்துள்ளோம். அதை உறுதிப்படுத்த பங்கிரி பகுதியில் உள்ள அணு ஆயுதச் சோதனைக் கூடத்தைத் தகர்க்கும் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளோம்" என்று வடகொரியா தெரிவித்தது.

மேலும், அந்த அணு ஆயுதச் சோதனைக் கூடம் தகர்க்கப்படுவதைப் பார்வையிட சர்வதேச ஊடகங்களைச் சேர்ந்த நிருபர்கள் பலருக்கும் வடகொரியா அனுமதி அளித்தது. ஆனால், தென் கொரிய நிருபர்களுக்கு அனுமதி வழங்க மறுத்து விட்டது. அதனால், பெய்ஜிங்கில் இருந்து வடகொரியாவின் பியாங்யாங் செல்ல விருந்த தென் கொரிய நிருபர்களுக்கு, விசா வழங்கப்படவில்லை. எனவே, அவர்கள் தென் கொரியா திரும்பினர்.

இந்த நிலையில், மற்ற நாடுகளைச் சேர்ந்த நிருபர்கள் கடந்த செவ்வாய் வடகொரியாவின் வொன்சன் பகுதிக்கு விமானத்தில் வந்திறங்கினர். அங்கிருந்து பங்கிரிப் பகுதி 200 கிலோ மீற்றர் துரத்தில் உள்ளது. தற்போது வானிலை சரியில்லாத காரணத்தால் நேற்று நிருபர்களைஅந்தப் பகுதிக்கு அழைத்துச் செல்வோம் என்று வடகொரியா கூறியுள்ளது.

இந்த நிலையில், கடைசி நிமிடத்தில் 8 தென் கொரிய நிருபர்கள் அணு ஆயுதச் சோதனைக் கூடம் தகர்க்கப்படுவதை நேரில் பார்வையிட வடகொரியா அனுமதி வழங்கியது. இதையடுத்து, அவர்களும் வொன்சன் பகுதியைச் சென்றடைந்தனர். (ஆ)

## கர்நாடகாவில் இன்று நம்பிக்கை வாக்கெடுப்பு

பெங்களூர், மே 25

கர்நாடகா முதலமைச்சராகப் பதவியேற்ற மதச் சார்பற்ற ஜனதா தளத் தலைவர் குமாரசாமி, சட்டசபையில் இன்று நம்பிக்கை வாக்கெடுப்பு நடத்த உள்ளார்.

கர்நாடகாவின் 25 ஆவது முதலமைச்சராக குமாரசாமியும், துணை முதலமைச்சராக காங்கிரஸின் பரமேஸ்வர் ஆகியோரும் பெங்களூரில் நேற்றுமுன்தினம் பதவியேற்றனர்.

இந்த அரசுக்குப் பெரும்பான்மையை நிரூபிக்க, ஆளுநர் வாலா 15 நாட்கள் அவகாசம் அளித்துள்ளார். ஆனால், குமாரசாமி இன்றே பெரும்பான்மையை நிரூபிக்க முடிவு செய்துள்ளதாகத் தெரிகிறது. காங்கிரஸ், ம.ஜ.த. கூட்டணியில், பகுஜன் சமாஜ், இரண்டு சுயேச்சை எம்.எல்.ஏக்களின் ஆதரவுடன் மொத்தமாக 118 உறுப்பினர்கள் உள்ளனர். பெரும்பான்மைக்கு 112 உறுப்பினர்களின் ஆதரவு தேவை என்பது குறிப்பிடத்தக்கது. (ஆ)

## தூத்துக்குடி வேட்டு:

# பலி எண்ணிக்கை 13 ஆக அதிகரிப்பு

தூத்துக்குடி, மே 25

தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலை எதிர்ப்புப் போராட்டத்தில் பொலிஸார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில், உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 13 ஆக அதிகரித்துள்ளது.

தூத்துக்குடியில் ஸ்டெர்லைட் ஆலைக்கு எதிராகக் கடந்த செவ்வாய்க் கிழமை ஆட்சியர் அலுவலகத்தை முற்றுகையிட்டு மக்கள் போராட்டம் நடத்தினர். இந்தப் போராட்டத்தில் வன்முறை வெடித்தது. இதில், பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தியதில் 10 பேர் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்தச் சம்பவத்தைக் கண்டித்து பல்வேறு பகுதிகளிலும் போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன. அதேசமயம் தூத்துக்குடியிலும் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்தவர்களின் உறவினர்கள் மற்றும் பொதுமக்கள் நேற்றுமுன்தினம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அவர்களைப் பொலிஸார் தடியடி நடத்திக் கலைத்தனர். இதையடுத்து, தூத்துக்குடிப் பகுதியில் மீண்டும் பதற்றம் ஏற்பட்டது. பொலிஸ் வாகனங்களுக்குத் தீ வைக்கப்பட்டது. இதனால், அனைத்துப் பகுதிகளையும் ஆயுதம் தாங்கிய பொலிஸார் சுற்றி வளைத்தனர். இந்த நிலையில், தூத்துக்குடி அண்ணா நகர்ப் பகுதியில் போராட்டக்காரர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. பொதுமக்கள் கற்களை வீசித் தாக்கினர். ஒரு கட்டத்தில் பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தினர். இதில், காளியப்பன் (வயது- 22) என்ற இளைஞர் உயிரிழந்தார். மேலும் 4 பேர் பலத்த காயமடைந்தனர். அவர்கள் உடனடியாக மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

இதேவேளை, துப்பாக்கிச்சூட்டில் படுகாயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த உசிலம்பட்டியை சேர்ந்த ஜெயராமன், செல்வசேகர் ஆகியோர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தனர். இதனால், பலி எண்ணிக்கை 13 ஆக அதிகரித்துள்ளது. (ஆ)

## ஸ்டெர்லைட் ஆலை மின்சாரம் துண்டிப்பு!

தூத்துக்குடி, மே 25

தூத்துக்குடியில் ஸ்டெர்லைட் ஆலைக்கு எதிராக நடந்த போராட்டத்தில் இடம்பெற்ற வன்முறையைத் தொடர்ந்து, மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் பரிந்துரையின் பேரில் நேற்றுக் காலை 5.15 மணி முதல் தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலையின் மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது. தமிழக அரசு இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது.

இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தைக் கண்டித்து பல்வேறு இடங்களிலும் சாலை மறியல் மற்றும் எதிர்ப்புப் போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன. இந்தநிலையில், தூத்துக்குடியில் கலவரம் ஏற்படாமல் தடுப்பதற்காக அங்கு 5 நாட்களுக்கு இணையதள சேவை முடக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஆ)

## ட்ரம்ப்- கிம் சந்திப்பு திட்டமிட்டபடி நடக்கும்!

### பாம்பியோ உறுதி



வொஷிங்டன், மே 25

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், வடகொரிய ஜனாதிபதி கிம் ஜோங் உன் ஆகியோருக்கு இடையேயான சந்திப்பு, திட்டமிட்டபடி எதிர்வரும் ஜூன் மாதம் 12 ஆம் திகதி நடைபெறும் என்று அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் மைக் பாம்பியோ தெரிவித்துள்ளார்.

"வடகொரியாவை அணு ஆயுதத்தைக் கைவிடச் செய்வது, அமெரிக்காவின் தேசிய பாதுகாப்புக்கு முதன்மையான விவகாரங்களில் ஒன்றாக ட்ரம்ப் நிர்வாகம் கருதுகிறது. ராஜ்ஜிய ரீதியில் கொடுக்கப்பட்ட அதிக பட்ச நிர்ப்பந்தங்கள், பொருளாதாரத் தடைகள் ஆகியனவற்றால் ட்ரம்ப்-கிம் ஜோங் உன் ஆகியோருக்கு இடையேயான வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சந்திப்பு திட்டமிட்டபடியே நடைபெற உள்ளது.

கொரிய தீபகற்பம் அணு ஆயுதமில்லாத பகுதியாக இருக்க வேண்டும் என்பதில் அமெரிக்கா தெளிவாக உள்ளது. இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு தற்போது சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. இதில், சரியான ஒப்பந்தத்தைச் செய்து கொள்ள வேண்டிய பொறுப்பை எங்களிடம் அமெரிக்க மக்கள் அளித்துள்ளனர்." என்று அவர் தெரிவித்தார்.

தன்னிச்சையாக அணு ஆயுதத்தைக் கைவிடும்படி கூறினால், ட்ரம்ப்-கிம் ஜோங் சந்திப்பு நடக்காது என வடகொரியா கடந்த வாரம் எச்சரித்திருந்தது. இதுகுறித்து அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் செவ்வாய்க்கிழமை கருத்து கூறியபோது, "அணு ஆயுத விவகாரத்தில் சீனாவின் தூண்டுதலால் வடகொரியா கடுமையான நிலைப்பாட்டை தற்போது எடுத்துள்ளது. இதனால், கிம் ஜோங் உன்னுடனான சந்திப்பு நடப்பது சந்தேகம்தான்." எனத் தெரிவித்திருந்தார். (ஆ)

## தற்கொலைத் தாக்கு: 7 பேர் உயிரிழப்பு!

### ஈராக்கில் துயரம்



பாக்தாத், மே 25


ஈராக்கின் தலைநகரான பாக்தாத்தில் மக்கள் அதிகம் கூடும் பூங்கா ஒன்றில் நேற்றுமுன்தினம் இரவு தற்கொலைப்படை நடத்திய தாக்குதலில், 7 பேர் உயிரிழந்துள்ளனர்.

இஸ்லாமியர்கள் பெரும்பான்மையாக வாழும் ஈராக் நாட்டின் பாக்தாத் நகரில், தற்போது இஸ்லாமியர்களின் புனித மாதமான ரமழான் கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

இந்த நிலையில், மக்கள் அதிகம் கூடும் பூங்கா ஒன்றில் தற்கொலைப்படை மூலம் வெடிகுண்டு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இந்தத் தாக்குதலில் 16 பேர் படுகாயம் அடைந்துள்ளனர். அவர்கள் தற்போது மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்தச் சம்பவத்துக்கு இது வரை எந்தப் பயங்கரவாத அமைப்பும் பொறுப்பேற்கவில்லை.

ஐ.எஸ் பயங்கரவாத அமைப்பினர் வடக்கு மற்றும் தெற்கு ஈராக் பகுதிகளில் பாதுகாப்பு படையினர் மீது தாக்குதல் நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஆ)



## தூத்துக்குடி துயரம்:

# லண்டனில் கொந்தளிக்கும் புலம்பெயர் தமிழர்கள்!

லண்டன், மே 25

தூத்துக்குடியில் ஜனநாயக முறையில் போராட்டம் நடத்திக்கொண்டிருந்தவர்கள் மீதான, பொலிஸாரின் மிலேச்சத்தனமான துப்பாக்கிப் பிரயோகத்தைக் கண்டித்தும், ஸ்டெர்லைட் ஆலையை மூடக் கோரியும் லண்டனில் உள்ள இந்தியத் தூதரகத்தை முற்றுகையிட்டு புலம்பெயர் தமிழர்கள் கண்டன ஆர்ப்பாட்டம் ஒன்றை மேற்கொண்டுள்ளனர்.

தூத்துக்குடி துப்பாக்கிப் பிரயோகத்தைக் கண்டித்து, நாடெங்கிலும் உள்ள தமிழ் மக்கள் கொந்தளித்துள்ளனர். இந்த நிலையில், லண்டன் தமிழர் ஒருங்கிணைப்பு குழுவின் ஏற்பாட்டில், நேற்றுமுன்தினம் மாலை 4 மணிக்கு இந்தக் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது .

இதன்போது, துப்பாக்கிச் சூட்டில் பலியான அப்பாவி மக்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதேவேளை, எதிர்வரும் சனிக்கிழமையும் பாரிய கண்டன ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஆ)

## 2020 யூரோப்பா சாம்பியன்ஸ் லீக் இஸ்தான்புல்லில் இறுதிப் போட்டி


இஸ்தான்புல், மே.25

இஸ்தான்புல் அட்டாடர்க் ஒலிம்பிக் மைதானத்தில் 2020 யூரோப்பா சம்பியன்ஸ் லீக் கால்பந்து தொடரின் இறுதிப் போட்டி நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஐரோப்பிய நாடுகளில் உள்ள முன்னணி கால்பந்து கிளப் அணிகளுக்கு இடையில் ஆண்டுதோறும் கால்பந்து லீக் தொடர் நடைபெறும். இதில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறும் அணிகள் கோப்பைக்காக பலப்பரீட்சை நடத்தும். இந்த வருடத்துக்கான (2017-18) இறுதிப் போட்டி உக்ரைனில் உள்ள கிவ் நகரில் நடைபெறுகிறது. இதில் ரியல் மட்ரிட் - லிவர்பூல் அணிகள் பலப்பரீட்சை நடத்துகின்றன.

2018-19 தொடரின் இறுதிப் போட்டி அடிட் லெடிகோ மட்ரிட் அணியின் ஹோம் தைனமான வாண்டா மெட்ரோபோலிடானோவில் நடக்கிறது. இந்த மைதானத்தில் 67 ஆயிரம் ரசிகர்கள் அமர்ந்து போட்டியை ரசிக்கலாம்.

இந்நிலையில் 2019-2020 தொடரின் இறுதிப் போட்டி துருக்கி இஸ்தான்புல்லில் உள்ள அட்டாடர்க் ஒலிம்பிக் மைதானத்தில் நடைபெறும் என யூஇஎப்ஏ தலைவர் அலெக்சாண்டர் செபரின் உறுதிப்படுத்தியுள்ளார்.



## அலன் போடரின் சாதனையை சமன் செய்த அலஸ்டைர்குக்

லண்டன், மே 25

தொடர்ச்சியாக 153 டெஸ்டில் பங்கேற்று இங்கிலாந்து தொடக்க வீரர் அலஸ்டைர் குக் அலன் போடர் சாதனையை சமன் செய்துள்ளார்.

இங்கிலாந்து அணியின் முன்னணி துடுப்பாட்டவீரர் அலஸ்டைர் குக். இவர் அதிக ஓட்டங்கள் அடித்த இங்கிலாந்து வீரர் என்ற பெருமையை பெற்றுள்ளார்.

நேற்று இங்கிலாந்து - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான முதல் டெஸ்ட் லண்டன் லோர்ட்ஸ் மைதானத்தில் தொடங்கியது. இந்த போட்டியில் இடம் பிடித்ததன் மூலம் அலஸ்டைர் குக், தொடர்ச்சியாக 153 டெஸ்ட் விளையாடிய வீரர் என்ற அவுஸ்ரேலிய ஜாம்பவான் அலன் போடர் சாதனையை சமன் செய்துள்ளார். இந்தியாவுக்கு எதிராக 2006-ல் அலஸ்டைர் குக் அறிமுகமானார். இந்த டெஸ்டில் சதம் அடித்து அசத்தினார். அதற்கு அடுத்த டெஸ்டில் உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் விளையாடவில்லை.

தற்போது பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட் அவரின் 155-வது டெஸ்ட். அதற்குப்பிறகு தொடர்ச்சியாக 153 டெஸ்டில் விளையாடியுள்ளார். 155 டெஸ்டில் 12078 ஓட்டங்கள் குவித்துள்ளார். அதிகபட்ச ஸ்கோர் 294 ஆகும்.

## ஐ.சி.சி ஆலோசனைக் குழுவில் மஹேல இணைப்பு

கொழும்பு, மே.25

இலங்கையின் முன்னாள் வீரர் மஹேல ஜயவர்தன மற்றும் இங்கிலாந்தின் அன்ட்ஷ்ரூ ஸ்ட்ரோஸ் ஆகியோர் ஐ.சி.சியின் ஆலோசனைக் குழுவின் முன்னாள் வீரர்களுக்கான பிரதிநிதிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

அதேபோன்று, சர்வதேச கிரிக்கெட் பேரவையின் ஆலோசனைக் குழுவில் பயிற்சியாளர்களுக்கான நிரந்தரப் பிரதிநிதியாக நியூசிலாந்து அணியின் தலைமைப் பயிற்றுவிப்பாளர் மைக் ஹேசன் நியமிக்கப்பட்டுள்ளார்.

முன்னதாக அவுஸ்ரேலிய அணியின் பயிற்சியாளராக பணிபுரிந்த டெரன் லீமன் உறுப்பினராக செயற்பட்டிருந்தார். எனினும், கடந்த மார்ச் மாதம் கேப்டவுனில் நடைபெற்ற தென்னாபிரிக்க அணியுடனான டெஸ்ட் தொடரின் போது அவுஸ்ரேலிய அணி வீரர்களான ஸ்டீவ் ஸ்மித், டேவிட் வோர்னர் மற்றும் கெமஷரூன் பேன்கிராப்ட் உள்ளிட்ட வீரர்கள் பந்தை சேதப்படுத்தி போட்டித் தடைக்குள்ளாகினர். இதனையடுத்து அவ்வணியின் பயிற்சியாளராகக் கடமையாற்றிய டெரன் லீமனும் தனது பதவியிலியிருந்து இராஜினாமாச் செய்தார்.

இதையடுத்து, ஐ.சி.சியின் ஆலோசனைக் குழுவில் அங்கம் வகிக்கும் பொறுப்பை அவர் இழந்த நிலையில், அவரின் இடத்துக்குப் பதிலாக மைக் ஹேசன் நியமிக்கப்பட்டுள்ளார்.






## ஜப்பான் கிளப்பில் இனியெஸ்டா

மட்ரிட், மே 25

பார்சிலோனா கால்பந்து கிளப் அணித் தலைவராக செயற்பட்ட இனியெஸ்டா ஜப்பான் கிளப்பில் இணைந்துள்ளார்.

ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த 34 வயதான அந்த்ரே இனியெஸ்டா நீண்ட காலமாக பார்சிலோனா அணிக்காக விளையாடி வந்தார். பார்சிலோனா அணியைத் தவிர மற்ற அணிகளுக்காக விளையாடியது கிடையாது. 2001 முதல் 2003 வரை பார்சிலோனா 'பி' அணிக்காக விளையாடினார். அதேவேளையில் 2002இல் இருந்து தற்போது 2018 வரை 18 வருடமாக அந்த அணிக்காக விளையாடினார்.

தற்போது பார்சிலோனா அணியில் இருந்து விலகுவதாக தெரிவித்தார். லா லிகா கோப்பையை கைப்பற்றியதுடன் அணியில் இருந்து விடைபெற்றார். இந்நிலையில் ஜப்பான் லீக்கில் பங்கேற்கும் விஸ்சல் கோப் அணியுடன் ஒப்பந்தம் செய்துள்ளார்.

டோக்கியோவில் அந்த அணியுடன் ஒப்பந்தம் செய்து கொண்ட இனியெஸ்டா, தனக்கு ஒதுக்கப்பட்ட 8ஆம் நம்பர் கொண்ட ஜேர்சியையும் வெளியிட்டார். 3 வருடத்துக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ள இனியெஸ்டாவிவுக்கு, ஆண்டு சம்பளம் 30 மில்லியன் அமெரிக்க டொலராகும்.

## வில்லியர்ஸ் இடத்தை நிரப்புவது கடினம்

கேப்டவுன், மே 25

சர்வதேச போட்டியில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்த டிவில்லியர்ஸ் இடத்தை நிரப்புவது கடினம் என்று தென்னாபிரிக்க முன்னாள் துடுப்பாட்டவீரர் பேரிரிச்சர்ட்ஸ் தெரிவித்துள்ளார்.

தென்னாபிரிக்காவை சேர்ந்த உலகின் சிறந்த அதிரடி துடுப்பாட்டவீரரான டிவில்லியர்ஸ் சர்வதேச போட்டியில் இருந்து ஓய்வு பெறுவதாக திடீரென அறிவித்தார். அவரது இந்த



முடிவு கிரிக்கெட் ரசிகர்கள் இடையே அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

"ஆற்றல் தீர்ந்து விட்டது களைப்படைந்து விட்டேன்" என்று தனது ஓய்வு குறித்து டிவில்லியர்ஸ் வீடியோ பதிவில் தெரிவித்துள்ளார்.

டிவில்லியர்சின் ஓய்வு முன்னாள், இந்நாள் வீரர்களுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. அவரது இடத்தை நிரப்புவது கடினம்

டிவில்லியர்சின் ஓய்வு தென்னாபிரிக்காவுக்கு மட்டுமல்ல உலக கிரிக்கெட்டுக்கே இழப்பாகும். இந்த விளையாட்டின் தூதுவர் அவர்.. டிவில்லியர்ஸ் இடத்தை நிரப்புவது மிகவும் கடினமானது என தெரித்தார்.

## ஆர்ஜன்ரீனாவுக்கு பெரும் பின்னடைவு

ஆர்ஜன்ரீனா, மே 25


ஆர்ஜன்ரீன கால்பந்தாட்ட அணியின் கோல்காப்பாளரான சேர்ஜியோ ரொமேரோ காயமடைந்துள்ளதால் உலகக் கிண்ண கால்பந்தாட்ட போட்டியிலிருந்து விலகியுள்ளார்.

ரஷ்யாவில் ஆரம்பமாகவுள்ள பீபா உலகக் கிண்ண கால்பந்தாட்ட போட்டி அடுத்த மாதம் 14 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. இப்போட்டியில் பங்குகொள்ளும் 32 அணிகளும் தத்தமது அணிகளை தயார்படுத்திக்கொண்டு வருகின்றன.

இந்நிலையில் இம்முறை உலகக் கிண்ணத்தை கைப்பற்றும் அணிகளில் ஒன்றாக கருதப்படும் ஆர்ஜன்ரீன அணியின் கால்பந்தாட்ட வீரரான சேர்ஜியோ ரொமேரோ முழங்காலில் ஏற்பட்ட காயம் காரணமாக உலகக் கிண்ணப் போட்டிகளில் விளையாட்ட மாட்டார்.

இவர் ஆர்ஜன்ரீனாவுக்காக 94 போட்டிகளில் விளையாடியுள்ளார்.

இவரின் வெளியேற்றம் ஆர்ஜன்ரீனாவுக்கு பெரும் பின்னடைவை ஏற்படுத்தும் என கால்பந்தாட்ட விமர்சகர்கள் கருதுகின்றனர்.



இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 25.05.2018 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.